விலை: 50.00
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 136 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 21 புதன்கிழமை (04.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கலயாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு

## பிக்கு மாணவர்கள் போராட்டம்





(கொழும்பு)
ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு பல்கலைக்கழக பிக்கு மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.
பல்கலைக் கழக பிக்கு 15



காலிமுகத்திடல் "கோட்டா கோ ஹம" விலும் நோன்புப் பெருநாள் கொண்டாட்டம்.

இந்நாள், முன்னாள் ஆட்சியாளர்களின்

# ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்திய ஜே.வி.பி

- நடேசனின் பெயரில் பசிலின் பெரும்பாலான சொத்துக்கள்.
- முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வீட்டிலுள்ள அனைவரும் அலோசியஸிடம் பணம் பெற்றுள்ளனர்.



பல்வேறுபட்ட ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பான சுமார் 40 ஆவணங்களை ஜே.வி.பி நேற்று வெளியிட்டுள்ளது.

"நாட்டை வீழ்ச்சியடைய செய்த திருட்டுக் கும்பலை கூண்டோடு வெளிப்படுத்துவோம்" என்ற தொனிப்பொருளில் ஊழல் எதிர்ப்புக்குழு கொழும்பில் நேற்று நடத்திய நிகழ்வின் போது இந்த ஆவணங்கள் வெளியிடப்பட்டன.

மேலும் 120 மோசடிச் சம்பவங்கள் தொடர்பான ஆவணங்கள் வெளியிடப்படவுள்ளதாக இதன் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

முள்ளிவாய்க்காலில்

## கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதியில் கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. 15

திடீர் காய்ச்சல்

## கொடிகாமத்தில் 11 மாத ஆண் குழந்தை மரணம்

(சாவகச்சேரி)
திடீர் காய்ச்சல் காரணமாக கொடிகாமத்தில் 11 மாத ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் நேற்று செவ் 15

## சாவகச்சேரியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(சாவகச்சேரி)
சாவகச்சேரியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி நகரை அண்மித்த ஏ9 வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் - வவுனியாவில் இருந்து வந்த பிக்கப் வாகனமும் சாவகச்சேரி இலங்கை வங்கி முன்பாக ஒன்றோடு ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளில் கடமை முடித்து வீடு திரும்பிய சிவில் பாதுகாப்பு 15

## பலாலி விமான நிலையத்தை திறக்க டெல்லிக்கு அழுத்தம் கொடுப்பேன்

அண்ணாமலை தெரிவிப்பு



(கொழும்பு)
எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் பலாலி விமான நிலையத்தை திறப்பதற்கு இந்திய மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளதாக பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநில தலைவர் கு.அண்ணாமலை நேற்று தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மோடி 15

அன்னை முத்துமாரி பஸ் சேவை

தற்பொழுது ஒரே நிர்வாகத்தின் கீழ் Village Hotel எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எமது சேவை தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது என்பதனை வாடிக்கையாளருக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.
மற்றுமொரு சேவை காரைநகரிலிருந்து K.K.S. நெல்லியடி, கொடிகாமம் ஊடாக கொழும்பை சென்றடையும். (11260)
Hotline 077 544 8503, 077 077 7775

சனி, ஞாயிறு

## சாரதி அனுமதி பத்திரம் பெறுவதற்கு விசேட எழுத்துப் பரீட்சை

06 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்த பாராளுமன்றில் இன்று விசேட உரை

பிரதமர் பதவி தொடர்பில் அறிவிப்பு வெளியிடலாம்



(கொழும்பு)
பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இன்று பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்த 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டங்களை அடக்கும் எண்ணம் அரச தலைவருக்கு இல்லை

## இணை அமைச்சரவைப் பேச்சாளர் நாலக

(கொழும்பு)

அமைதி வழியில் நடைபெறும் போராட்டங்களை பலத்தை பயன்படுத்தி அடக்கும் எண்ணம் அரச தலைவருக்கு இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை ஊடக சந்திப்பின் போது இணை அமைச்சரவைப் பேச்சாளரான நாலக கொடஹேவா மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடும் இளைஞர்கள் மூன்றாம் தரப்பினரால் கையாளப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். அமைதியான பொதுப் போராட்டங்களை தனிப்பட்ட இலாபங்களுக்காகப் பயன்படுத்த சில குழுக்கள் முயற்சிப்பதை அரசாங்கம் அவதானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

காலி முகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் சிலையின் கண் கட்டப்பட்டமை தொடர்பில் வெளிநாட்டு நிறுவனங்கள் செல்வாக்கு செலுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிலையை அகற்ற வேண்டும் என சமூக வலைத்தளங்களில் பதிவுகள் பரவி வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டு சம்பவங்களுக்கும் தொடர்புள்ளதா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். ஜனநாயக ரீதியில் அரசாங்கம் இதுவரை போராட்டங்களை நடத்த அனுமதித்துள்ளது.

பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வரையில் போராட்டங்கள் தடைப்படாது என்பது அரச தலைவரின் கருத்து என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)



பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டு மாநிலத் தலைவர் அண்ணாமலை கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களை சந்தித்து கலந்துரையாடிய போது.

# சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்த ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அணிக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முற்பகல் பேச்சுவார்த்தை ஒன்று நடந்துள்ளது.

இதன் போது தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கம், நம்பிக்கையில்லா தீர்மானம் மற்றும் பிரதி சபாநாயகர் பதவி தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. நேற்று நடந்த முதல் கட்டப் பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதுடன் மீண்டும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த இரண்டு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள விமல் வீரவன்ச,

"ஐக்கிய மக்கள் சக்தியுடன் இன்று எமது ஐந்து பேர் அடங்கிய குழு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. கடந்த வாரம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வுகளைப் போல் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காணாத பாராளுமன்ற அமர்வாக அடுத்த அமர்வை மாற்றாது, தனிப்பட்ட ரீதியில் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அனைத்து தரப்புடனும் பேச்சவார்த்தை நடத்தி ஒரு இணக்கத்திற்கு வரவே நாங்கள் முயற்சித்து வருகின்றோம்"எனக் கூறியுள்ளார். (ம-7)

# நுவரெலியாவிலும் 'கோட்டா கோ கம'

(நுவரெலியா)

கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி கொழும்பு காலிமுகத்திடலில் இளைஞர், யுவதிகள் தலைமையில் 'கோட்டா கோ கம' போராட்டம் நடைபெற்று வருகிறது.




இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் நுவரெலியா வாழ் இளைஞர்கள் ஏற்பாட்டில் "கோட்டா கோ கம" கிளை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதான மத்திய சந்தைக்கு முன்பாக இந்த "கோட்டா கோ கம" கிராமத்தின் கிளை அமைக்கப்பட்டுள்ளது. (ம-7)


வாழ்த்துகின்றோம்



பேராசிரியர்
ஜே. றொபின்சன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
முகாமைத்துவ பீடம் - யாழ். பல்கலைக்கழகம்)

மனித வள மேலாண்மை முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளரும் எங்களின் நீண்ட கால நண்பனுமாகிய கலாநிதி **ஜே. றொபின்சன்** அவர்கள் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றிருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன் மனம் நிறைவான வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(11257, 11258)

வாழ்த்துபவர்கள்:

**Dr. கோபிசங்கர்** (சத்திர சிகிச்சை நிபுணர்),
**Dr. ரமேஸ்** (முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்),
**வோல்டன், டெனி, யூரிசன், அரவிந்தன், டயஸ், மணிவண்ணன், சசி, விஜயன்**

தகவல் - நா. விஜயகுமார் (சுவிஸ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம்

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

**குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.**



தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கே இவ்வாறு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

அதன்படி, அடையாளம் காணப்பட்ட 3.34 மில்லியன் குடும்பங்களுக்கு மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை விசேட பணக் கொடுப்பனவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனை நேற்று சந்தித்து கலந்துரையாடினார். (படம் : சிவசாந்தன், கஜிந்தன், ரவிசாந்)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் சபாநாயகரிடம் கையளிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் இரண்டையும் சபாநாயகரிடம் ஐக்கிய மக்கள் சக்தி கையளித்துள்ளது. நேற்று குறித்த பிரேரணையை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளித்ததாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.(நி)

## போராட்டத்திற்கு ஆதரவாக

# தலவாக்கலையில் இருந்து தனி மனித நடை பவனி



(ஹற்றன்)

கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசாங்கத்திற்கு எதிரான தொடர்ச்சியான போராட்டத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் தனி மனித நடைபவனி போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலை நகரில் இருந்து சசிகுமார் என்ற தனி மனிதர் ஒருவரே இவ்வாறு நடை பவனியாக தனது போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளார். (நி)

# ராஜபக்ஷ குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட கௌரவப் பட்டங்களை திரும்பப் பெறுங்கள்

## அஸ்கிரிய பீடாதிபதிகளிடம் காலி போராட்டக்குழு கோரிக்கை

(கொழும்பு)

நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் 'வீட்டுக்கு கோதா' போராட்டத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று செவ்வாய்க்கிழமை கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்துள்ளனர்.

ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக சங்க மாநாட்டு ஆணை பிறப்பிக்குமாறு பிரதிநிதிகள் பிரதம பீடாதிபதிகளிடம் கோரிக்கை விடுத்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கௌரவப் பட்டங்களைத் திரும்பப் பெறுமாறும் கோரிக்கை விடுத்துள்ளதோடு அவர்களுக்குத் தொடர்புள்ள எந்தவொரு மத நிகழ்வுகளிலும் கலந்து கொள்ள வேண்டாம் எனவும் பிரதம தலைவர்களிடம் தெரிவித்துள்ளனர். (நி)

# எரிவாயு விலை குறைவடையும் சாத்தியம்

## தாய்லாந்தில் இருந்து எரிவாயு இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

தாய்லாந்தின் சியாம் எரிவாயு நிறுவனத்திடமிருந்து ஒரு வருடத்திற்கு சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த இரு ஆண்டுகளில் எரிவாயுவை இறக்குமதி செய்யும் நிறுவனமானது மெட்ரிக் தொன் ஒன்றுக்கு அறவிட்ட தொகையை விட 9 டொலர் குறைவாக புதிய நிறுவனத் திடமிருந்து எரிவாயுவை பெற முடியும்.

கடந்த 2 ஆண்டுகளாக, ஓமானில் இருந்து நாட்டுக்கு எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. எனினும், குறித்த நிறுவனத்துடனான ஒப்பந்தம் இந்த மாதத்துடன் நிறைவடைகிறது.

புதிய நிறுவனத்திடமிருந்து 9 டொலர் குறைவாக எரிவாயுவை பெற முடியும் என்பதால் நாட்டில் எரிவாயு விலை குறைவதற்கான வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தொடரும் போராட்டம்

## நேற்றும் பெருமளவானோர் பங்கேற்பு



(கொழும்பு)

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டம் 25 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

நேற்றும் பாரியளவான மக்கள் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

சர்வமதத் தலைவர்கள், இளைஞர் - யுவதிகள், சிவில் அமைப்புகள், கலைஞர்கள், பல்கலைகழக மாணவர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் போராட்டத்திற்கு ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

அதேநேரம், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி அலரிமாளிகை முன்பாக 7 ஆம் நாளாகவும் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அலரிமாளிகை வளாகத்தில் உள்ள நடைபாதையில் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இளைஞர்கள் சிலர் தொடர்ச்சியான உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். (நி)

# ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக ஐக்கியத் தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

காணொளி தொழில்நுட்பம் தொடர்பான கலந்துரையாடலின் போது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ளார்.

இதேநேரம், நம்பிக்கையில்லாப் பிரேரணையை தாம் எதிர்க்கவில்லை என தெரிவித்த அவர், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னர் என்ன நடக்கும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுக்கும் இதே பிரச்சினை இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தா நைட்ரைடர்ஸ் வெற்றி



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 47 ஆவது லீக் போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மும்பையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 152 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சஞ்சு சம்சன் 54 ஓட்டங் களையும் சிம்றொன் ஹெட்மியர் ஆட்டமிழக் காது 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சில், டிம் சவுத்தீ 2 விக்கெட்டுகளையும் உமேஷ் யாதவ், அன்குல் றோய் மற்றும் சிவம்மாவி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



இதனைத்தொடர்ந்து 153 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, 19.1 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, நிதிஷ் ரணா ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களையும் ரின்ங்கு சிங் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், ட்ரெண்ட் போல்ட், பிரசீத் கிருஸ்ணா மற்றும் குல்தீப் சென் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தி னர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 23 பந்து களில் 1 சிக்ஸர் 6 பவு ண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 32 ஓட்ட ங்களை பெற்றுக் கொண்ட ரின்ங்கு சிங் தெரிவு செய்யப்பட்டார். (4)

# நொதேண் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகங்களுக்கிடையிலான எல்லே போட்டியில் நொதேண் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

நேற்றுக் காலை மேற்படி சுற்றுப்போட்டி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டிக்கு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் நொதேண் விளையாட்டுக் கழகமும் தெரிவாகின.

பரபரப்பாக நடைபெற்ற மேற்படி இறுதிப்போட்டியில் நொதேண் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.(ம-7)




கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு மகேஸ்வரன் தனேசனின் நிதிப் பங்களிப்பில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெய்வேந்திரம் கிரிதரன் ஏற்பாட்டில் துவிச்சக்கர வண்டி ஒன்று அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2609

சதுர்சன்




கபினா




கஸ்தூரன்




தனுசன்




கேதாரன்




சுரேஜிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதமும் அரசியலும் தனித்தனியாகச் சென்றால் கடவுள்களும் மகிழ்ச்சியடைவார்கள்-மனோ டுவிட்

(கொழும்பு)

அரசியல்வாதிகளை சந்திக்க மறுப்பதாக மல்வத்தை மகா நாயக்கர் எடுத்த தீர்மானத்தை அனைத்து மதத் தலைவர்களும் பின்பற்ற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய இலங்கைச் சீர்திருத்தத்தில் "மதமும் அரசியலும் தனித்தனியாகச் சென்றால்" நமது கடவுள்களும் கூட மகிழ்ச்சியடைவார்கள் என்றும் அவர் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறுவதற்கு உதவியாக இருந்து ஆசீர்வதித்த மல்வத்தை மகா நாயக்கர், நாட்டில் மாற்றம் ஏற்படும் வரை எந்த ஒரு அரசியல்வாதியையும் தாம் சந்திக் கப்போவதில்லை என அறிவித்திருந்தார்.

இந்நிலையில் அவரது கருத்து தொடர்பிலேயே மனோ கணேசன் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார். (நி)

## நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் தொழில்நுட்பக் கோளாறு

(கொழும்பு)

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் உள்ள 270 மெகாவோல்ட் மின்சார உற்பத்தி இயந்திரமொன்றில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

அதன் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த பணிகள் 5 நாட்கள் வரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மின்சார தடை நேரம் நீடிக்கப்பட மாட்டாது என வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (நி)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

## துரைச்சாமி சையோகநாதன்

திதி: வளர்பிறை சதுர்த்தி

( உரிமையாளர் - வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கச்சான் பிஸ்கட் தயாரிப்பகம் )



ஈராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்
கற்றுத் தந்தவரும் நீங்கள்
பற்று வைத்தவரும் நீங்கள்
இனிய தருணங்களை எமதாக்கியவரும் நீங்கள்
இவ் இனிய வாழ்வை எமக்களித்து அதில்
நீங்கள் அற்றுப் போனதேன் அப்பா!
எம் முன்னே உம் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கி சென்றாலும்
கண் விட்டு மறையாமல் என்றென்றும்
நீங்கள் இருப்பீர்கள் எம்முடனே

(1261)

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 312 6909

76/05, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

மலர்வு 01.08.1950

உதிர்வு 26.04.2020


# இராசிபலன்

04.05.2022
சித்திரை 21, புதன்கிழமை
திருதியை காலை 6.46 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 5.14 மணிவரை
சுபநேரம் - 4.26 - 5.56 மணிவரை
இராகுகாலம் -11.56 -1.26 மணிவரை

சதுர்த்தி விரதம், அக்கினி நாள் ஆரம்பம்.
சந்திராஷ்டமம்- விசாகம்

வளவன்

**மேஷம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**ரிஷபம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கனிவாகப்பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், கௌரவமானவர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், தொழிலில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**கடகம்** வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**சிம்மம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** செய் தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**துலாம்** பொறுமையால் பெருமை காணும் நாள், பயணங்களின் போது விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது, தேவையற்ற விரயங்களைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்** நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மீனம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதுவுவார்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

நேர்மையான பார்வைக்கு பல தவறுகள் மறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 வருடங்களாக பூட்டப்பட்ட இந்து ஆலயங்களின் சாபமே நாட்டை பாடுபடுத்துகிறது

### கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.காங்கேசன்துறையில் எவ்வித பூசை வழிபாடுகளும் இன்றி சுமார் 30 வருடங்களுக்கு மேலாக பூட்டப்பட்ட இந்து ஆலயங்களின் சாபமே தற்போது நாட்டைப் பாடுபடுத்துவதாக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ் வந்த இந்திய பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலையை நல்லை ஆதீன குருமுதல்வர் சந்நிதானத்தில் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் காங்கேசன்துறை பகுதியில் மக்களின் காணிகளை பறித்து ஆடம்பர ஜனாதிபதி மாளிகை கட்டியுள்ள நிலையில் மக்களை இன்னும் மீள் குடியேற்றம் செய்ய வில்லை.

ஆனால் அப்பகுதியில் காணப்படுகின்ற நான்குக்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் இன்னும் பூசை வழிபாடுகள் இன்றி பூட்டப்பட்ட நிலையில் அதனுடைய சாபங்களே இன்றைய நாட்டின் நிலைமைக்கு காரணமாகும்.

சடையம்மா மடம் விஷ்ணு கோயில் மற்றும் சிவன் கோயில் உட்பட அப்பகுதியில் பல இந்து ஆலயங்கள் இருக்கின்ற நிலையில் ஆட்சியாளர்கள் அதனை விடுவித்து பூசை வழிபாடுகள் இடம் பெற அனுமதிக்க வேண்டும்.

நாங்கள் எவ்வித அரசியல் கட்சியையும் சார்ந்தவர்கள் அல்ல மதத்தலைவர்கள் என்ற ரீதியில் மக்களுடைய பிரச்சினைகளை தெளிவாக எடுத்துரைத்தோம்.

பாரத பிரதமர் நரேந்திர மோடி தமிழ் மக்கள் தீர்வு விடயத்தில் அக்கறையாக உள்ள நிலையில் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்குரிய தீர்வும் காணப்பட வேண்டும் என அவர் மேலும்தெரிவித்தார்.(4-104)

## சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான விசேட எழுத்துப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சைக்கான அனுமதி அட்டையினைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளுக்கான விசேட பரீட்சைகள், எதிர்வரும் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக மே மாதம் 31 ஆம் திகதி வரை அனுமதி அட்டையினைப் பெற்றுக் கொண்டவர்கள், குறித்த தினங்களில் பரீட்சை அனுமதி அட்டையுடன் அதன் போட்டோ பிரதி, தேசிய அடையாள அட்டை,மருத்துவச்சான்றிதழ், ஆகிய ஆவணங்களுடன் வருகைத் தந்து பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

எழுத்துப் பரீட்சைகள் காலை 9.30 மணி, 11 மணி மற்றும் பி.ப 12.30 மணி என மூன்று அமர்வுகளாக நடைபெறும். (4)



இடைக்காடர் ஈஸ்வரன் எழுதிய இடைக்காடு எம் தாயகம் - வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடைக்காடு மகாவித்தியாலய மண்டபத்தில் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நடைபெற்றது. (படம்- ரவிசாந்)

## அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளை சந்தித்தார் அண்ணாமலை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள பாரதிய ஜனதாக்கட்சியின் தமிழ்நாட்டு மாநிலத் தலைவர் அண்ணாமலை யாழில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளைச் நேற்று சந்தித்தார்.

இதன்போது தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்,அதிலிருந்து மீள்வதற்கான வழிகள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் வடபகுதி பொருளாதார முன்னேற்றத்திற்கு தமிழகத்துடனான தொடர்பு முக்கியமானது என்பது சுட்டிக்காட்டப்பட்டதோடு இது வணிகவிருத்திக்கு அவசியமானது போன்ற விடயங்கள் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமானநிலையத்தை மீளத் திறப்பதற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் மற்றும் காங்கேசன் துறையிலிருந்து காரைக்காலுக்கான கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை யடங்கிய மகஜர் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

'இந்த விடயங்களை டில்லிக்கு எடுத்துச்சென்று நிச்சயமாக விமானநிலையத் திறப்பு மற்றும் கப்பல் போக்குவரத்து என்பவற்றிற்கு ஏற்பாடுகள் செய்வதாக அண்ணாமலை உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர் எஸ். யுகெந்திரா, செயலாளர் தே.தேவானந்த் மற்றும் செயற்குழு உறுப்பினர்களான எஸ். இன்பரூபன்,எஸ். திலீபன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (4-18-33-18-104)

## பிரதேச சபை உறுப்பினர் வீட்டில் திருடர்கள் கைவரிசை

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில் வசிக்கும் வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் வீட்டில் கடந்த முதலாம் திகதி திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறித்த பிரதேச சபையின் உறுப்பினர் மற்றும் அவரது குடும்பம் நிகழ்வு ஒன்றிற்கு சென்றது.

இச்சந்தர்ப்பத்தில் அவரது வீட்டினை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் எரிவாயு சிலிண்டர், கிரைண்டர், வங்கிக் கணக்கு புத்தகம் மற்றும் வங்கி தானியங்கி இயந்திர அட்டை (ATM அட்டை) என்பற்றினை களவாடிச் சென்றுள்ளனர்.

பிரதேச சபையின் உறுப்பினர் வீட்டிற்கு வந்து பார்த்தவேளை வீடு உடைத்து திருட்டு போயிருந்த விடயம் அவருக்கு தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-1-104)

## தமிழகம் செல்ல முற்பட்ட நால்வர் வேலணையில் கைது

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு செல்லும் அகதிகளது எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அந்த வகையில் யாழ்.- வேலணை, வென்புரி ஊடாக தமிழகம் செல்ல முயன்ற வவுனியாவைச் சேர்ந்த ஒரு சிறுவன் உட்பட நால்வர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர். பொலிஸார் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-33-101-104)

## களை கட்டாத அட்ஷய திருதியை

(குப்பிழான்)

ஐஸ்வரியம் தரும் அட்ஷய திருதியை நன்னாள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆகும்.

இதனை முன்னிட்டு இம்முறையும் யாழ்.நகரில் அமைந்துள்ள நகைக் கடைகளில் அட்ஷய திருதியை பெருமளவில்களை கட்டவில்லை.

கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக அட்ஷய திருதியை நகை வியாபாரம் இடம்பெறாத நிலையில் தற்போதைய கடும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் தங்க நகைகளின் விலை அதிகரிப்புக் காரணமாகவும் இம்முறையும் பெருமளவில் அட்ஷய திருதியை வியாபாரம் களை கட்டவில்லை.

வழமையாக அட்ஷய திருதியை நாளில் நகைகளைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களே நகைக் கொள்வனவில் ஆர்வம் காட்டினர்.

அத்துடன் புதிய வாடிக்கையாளர்கள் குறைந்தளவிலேயே நகைகளைக்கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. (4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்சினையை கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் மக்கள் அனுபவிக்கின்றனர்

## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு



பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையுடனான சந்திப்பில் தற்போது உள்ள தமிழர்களுக்களுக்குரிய 13 ஆம் திருத்தச் சட்டத்தினை நீக்குவதாக இருந்தால் இந்தியாவினுடைய அனுசரணையுடன் தமிழ் மக்களுக்கான கூட்டு சமஷ்டி யாப்பினை கொண்டு வந்த பிற்பாடுதான் நடைமுறைப்படுத்த முடியும் என்பதையும் சுட்டிக்காட்டி கூறியிருந்தேன் என அவர் தெரிவித்தார். (நி)

(யாழ்ப்பாணம்)

**30 வருட காலமாக இராணுவத்தளபாடங்களை வாங்குவதற்காக கடன் உதவிகளை வாங்கியதால் நாட்டில் தற்போது பொருளாதார பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று யாழில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார பிரச்சினையை ஏற்கனவே தமிழ் மக்கள் கடந்த 30 வருடகாலமாக அனுபவித்து வந்துள்ளார்கள். குண்டு வீச்சினையும் சந்தித்தார்கள், இதனை பற்றி எவரும் கவலைப்படவில்லை.

எனினும் இந்த பொருளாதார பிரச்சினைகளை நாடு பூராகவும் மக்கள் அனுபவிக்கிறார்கள், பணம் இருந்தும் பொருட்களை வாங்க முடியாத நிலை காணப்படுகிறது.

ஆட்சி மாற்றத்தினால் இந்த பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. அரசியல்வாதிகள் நாடகமாட பார்க்கிறார்கள். மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக தெரியவில்லை. எனவே ஆட்சி மாற்றம் தொடர்பாக ஒரு மயக்க நிலையில் உள்ளது.

# சிங்கள மக்களுக்கு எம்மில் இருப்பது ஒரு அனுதாபம் மாத்திரமே



(கொழும்பு)

சிங்கள மக்களுக்கு எம்மில் இருப்பது ஒரு அனுதாபம் மாத்திரமே, அது நாளைக்கே போய்விடும் எனச் சட்டத்தரணி சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்தார். "சிங்கள மக்கள் தற்போது தமிழர் தீர்வு தொடர்பிலான பதாகைகளை ஏந்தியிருக்கின்ற நிலையிலும் அவர்களுடைய பொருளாதார பிரச்சினை தீர்ந்த பிறகும் இதே மனநிலையில் இருப்பார்களா" என கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய தலைமுறை அதிலும் சிங்கள தேசத்தைப் பொறுத்தவரை இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு தெளிவான அறிவு கொண்டதல்ல.

இந்த நாட்டிலே இனப்பிரச்சினை எப்போது ஆரம்பித்தது, எங்கே ஆரம்பித்தது, தமிழர்களுக்கு எவ்வாறான அநியாயங்கள் எல்லாம் இடம் பெற்றன என்பது தொடர்பில் அவர்களுக்குத் தெரியாது.

சிங்கள அரசியல்வாதிகள் சிலருக்குக் கூட தெரியாது அவர்கள் இருளிலிருந்து கொண்டிருக்கிறார்கள். பொதுவாக தமிழர்களுக்கு இந்த நாட்டிலே அநீதி இழைக்கப்பட்டது. அரச பயங்கரவாதத்தால் பல தடவைகள் பெருமளவில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் அரங்கேறின.

இது அவர்களுக்கு ஓரளவு தெரிந்துள்ளது, அதனால் ஒரு அனுதாபமுள்ளது. ஆனால் அது நாளைக்குப் போய்விடும். இந்நிலையில் வெண்ணெய் திரண்டு வருகிறபோது நாங்கள் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# மதுபான விலை அதிகரிப்பு

(கொழும்பு)

மதுபான போத்தல் ஒன்றின் விலை 80 ரூபாவினாலும், பியர் போத்தல் ஒன்றின் விலை 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வு குறித்து மதுபான நிறுவனம் கலால் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது. போக்குவரத்து, மூலப்பொருட்கள் உள்ளிட்ட செலவுகள் அதிகரித்து வருவதால், மதுபானம் மற்றும் பியர் நிறுவனங்கள் விலையை உயர்த்தியுள்ளன.

அரசாங்கத்தால் கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அரக்கு மற்றும் பியர் மீதான வரி அதிகரிக்கப்பட்டதன் பின்னர் இதுவரையில் எவ்வித வரி அதிகரிப்பும் மேற்கொள்ளப்படவில்லை என கலால் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 2<br>கி.பா: 40 சூரி 6 செவ் 5 இல் உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L. பலநோக்கு கூ.சங்க கிளாக்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12569 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 42 சூரி 7 செவ் 5 உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்<br>தொ.இ:G/9532 |
| பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம் : பூசம் 2<br>கி.பா: 32 சூரி 2 செவ் 12 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: cima விவசாய பீடம் பட்டம் முடிக்கவில்லை காட்வெயார் கடை சொந்தம்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12573 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: சூரி 8 செவ் 5 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:BSc பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச தொழில்<br>தொ.இ:G/9534 |
| பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 4 சூரி 6 செவ் 3 உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: வியாபார முகாமைத்துவம் அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12575 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: சூரி 9 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Ph.D (USA) Consultant (தனியார்) USA<br>எதிர்பார்ப்பு: Ph.D, Doctor Canada USA<br>தொ.இ:G/9540 |
| பிறப்பு:1981 இந்து நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: சூரி 11 செவ் 10 உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: கையடக்க தொலைபேசி திருத்துநர் (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12580 | பிறப்பு: 1991 NRC<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BBA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: படித்த கிறிஸ்தவ ஆண்<br>தொ.இ:G/9542 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# 300 மில்லியன் யுவான் நிதியுதவி வழங்க சீனா தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைக்கு 300 மில்லியன் யுவான் நிதியுதவி வழங்க சீன அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் சீனப் பிரதமர் லீ கெகியாங்கிற்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலினை அடுத்து இந்த நிதியுதவி இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் அத்தியாவசியமான மருந்துகள், உணவுப் பொருட்கள், எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படும் என பிரதமர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கொழும்பில் பிக்கு மாணவர்கள் பெரும் போராட்டம்

(கொழும்பு)

கொழும்பில் அரசுக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியம் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியைத் நேற்று முன்னெடுத்துள்ளது.

இதில் பெருமளவிலான பல்கலைக்கழக பிக்கு மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்தப் போராட்டம் காரணமாகக் கொழும்பு [illegible] கொம்பனித் தெரு வீதியில் [illegible] நெரிசல் ஏற்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் தரிசனம் 36

# உழைத்துப் பெற்றதை மனம் இழக்க நினைக்காது



ஒரு செல்வந்தர் தனது மகனுக்கு தொழில் மற்றும் படிப்பினையைக் கற்றுக் கொடுப்பதற்காக தனது நண்பரின் நிறுவனம் ஒன்றில் பணி செய்ய தனது மகனை 6 மாத காலத்திற்கு அனுப்பி வைத்தார். அவர் மகனோ எந்த வேலையும் செய்யவில்லை ஆனாலும் தனது நண்பர் மகன் என்பதால் அவரும் கண்டுகொள்ளாமல் 6 மாதம் கடந்த வுடன் ஒரு தங்க நாணயத்தை கூலி யாக கொடுத்து, அனுப்பினார்...

அந்த நாணயத்தை தனது அப்பாவிடம் மகன் கொண்டு வந்து கொடுத்தான் அதனை வாங்கிய அப்பா அதனை தூக்கி தூர எறிந்தார். அதை கண்ட மகனோ ஒன்றும் கண்டு கொள்ளாமல் தனது படுக்கை அறைக்கு சென்று விட்டான்..

மீண்டும் இன்னொரு தெரிந்த நண்பரிடம் 3 மாதத்திற்கு வேலைக்கு அனுப்பினார். அங்கும் இப்படித்தான் எந்த வேலையும் செய்யாமல் 3 மாதம் கடத்தினான்.

ஆனாலும் தனது நண்பர் மகன் என்பதால் அவரும் 2 தங்க நாணயங்கள் கொடுத்து அனுப்பினார்.

அதையும் அப்பாவிடமே கொண்டு வந்து கொடுத்தான்

முன்பு போலவே அந்த 2 நாணயங்களையும் தூக்கி தூர எறிந்தார்...

அப்போதும் கண்டு கொள்ளாமல் மாடிக்கு சென்று விட்டான்!

சிறிது காலம் கழித்து அறிமுகம் இல்லாத ஒருவர் இடத்தில் வேலைக்கு சேர்த்து விட்டார். அங்கு 3 மாதம் வேலை செய்து விட்டு 1/2 தங்க நாணயத்தை ஊதியமாக கொண்டு வந்து கொடுத்தான்...

முன்புபோலவே அதையும் தூர தூக்கி எறிந்தார்...

ஆனால் இம் முறை அவனுக்கு மிக பெரிய அளவில் கோபம் வந்து விட்டது.

இது என்ன தெரியுமா?

எனது வேர்வை ! எனது உழைப்பு !

3 மாதம் தூங்கமால் உழைத்து இருக்கிறேன் அதற்க்கான கூலி!

இவ்வளவு அலட்சியமாக தூக்கி எறிந்து விட்டாய்!

நீ எல்லாம் ஒரு மனிதனா?

ஏசி சேரில் படுத்து கிடக்கும் உனக்கு உழைப்பின் வலிமை தெரியவில்லை. தெரிந்தால் இதை எறிந்து இருப்பாயா என்று கோபமாக கத்தினான்?

அப்பொழுது அப்பா சொன்னார் இதைத்தான் உன்னிடம் நான் எதிர்பார்த்தேன். முன்பு நீ உழைக்காமல் கொண்டு வந்து கொடுத்த தங்க நாணயத்தை நான் தூர எறிந்த பொழுது உனக்கு கோபம் வரவில்லை.

காரணம் அப்போது உனக்கு உழைப்பின் அருமை தெரியவில்லை.

இப்போது நீ உழைத்து கொண்டு வந்த இந்த தங்க நாணயத்தை நான் எறிந்த பொழுது உனக்கு இவ்வளவு கோபம் வருகிறது.

காரணம்... நீ கஷ்டப்பட்டு உழைத்து பெற்று வந்ததால் உழைப்பின் வலிமை உனக்கு தெரிகிறது.

இதைத்தான் நான் உன்னிடம் எதிர்பார்த்தேன் என்று சொல்லி மகனையும் அந்த 1/2 பவுண் தங்க நாணயத்தையும் மாறி மாறி முத்தம் இட்டார்.

உழைக்காமல் எது கிடைத்தாலும் நிலைக்காது அதனின் அருமை தெரியாது...

உழைத்து பெற்ற பொருளை ஒருபோதும் மனம் இழக்க நினைக்காது...


**அன்பு வாசகர்களே!**

**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

# ரஷ்


# புதிய பொரு

# தயாராகு



# போரில் யாரும் வெல்ல

## ஜேர்மனியில் இந்திய பிரத



(பெர்லின்)

ரஷ்யா-உக்ரைன் போரில் யாரும் வெற்றி பெறமாட் டார்கள். அனைவரும் தோற் றுப் போவார்கள். அதனால் தான் நாங்கள் அமைதிக்கு ஆதரவாக இருக்கிறோம். சமாதானத்தை வலியுறுத்து கிறோம் என இந்தியப் பிரத மர் நரேந்திர மோடி தெரி வித்துள்ளார்.

ஜேர்மன் சென்ற இந்தியப் பிரதமர் அங்கு ஜேர்மன் பிரதமர் ஒலாப் ஷோல்ஸை சந்தித்துப் பேசினார்.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு இரு நாட்டு பிரதமர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித் தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட இந்திய பிரதமர் மோடி, உக்ரைன்-ரஷ்யா மோதல் தொடங்கியபோதே வன்முறைகள் உடனடியாக நிறுத் தப்பட்டு, பிரச்சனைக்கு பேச்சுவார் த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என இந்தியா வலியுறுத் தியது.

இந்தப் போரில் எத்தரப்புக்கும் வெற்றி கிடைக்காது. மாறாக அனை வரும் பெருமளவில் பாதிக்கப்படுவர். உக்ரைன் விவகாரத்தால் கச்சா எண்ணெய் விலை விண்ணைத் தொட்டுள்ளது. உரங்கள், உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு

# போப் பிரான்ஸிஸை சந்திக்கிறார் ஜப்பான் பிரதமர் புமியோ

(வத்திக்கான்)

தென்கிழக்கு ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளு க்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுவரும் ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடா, போப் பிரான்சிஸை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இன்று புதன்கிழமை வத்திக் கானில் இருவரும் சந்தித்து பேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷ்யாவுக்கு எதிராக
# பொருளாதார தடைகளை விதிக்க
# ம் ஐரோப்பிய ஒன்றியம்

**(பிரஸ்ஸல்ஸ்)**

**ரஷ்யாவுக்கு எதிராக மேலும் புதிய பொருளாதாரத் தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் இந்த வாரம் முன்மொழியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.**

ரஷ்ய எண்ணெயை வாங்குவதற்கான தடைகளை மேலும் இறுக்குவது உட்பட பல்வேறு தடைகள் ரஷ்யாவுக்கு எதிராக விதிக்கப்படலாம். இதனால் ரஷ்யா மேலும் பெருமளவு வருவாய் இழப்பை சந்திக்கும் எனக் கருதப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு பேரவை கூட்டம் எதிர்வரும் 10 மற்றும் 16 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில் இக்கூட்டத்தில் புதிய தடைகள் அறிவிக்கப்படலாம் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் ரஷ்யா தனது தாக்குதல்களை தீவிரப்படுத்துகிறது. இந்நிலையில் புதிய தடைகள் முற்றிலும் இன்றியமையாதது எனவும் ஜோசப் பொரெல் கூறியுள்ளார்.

ரஷ்யா செய்யும் செயல்களுக்கு விலை கொடுக்க நமது பொருளாதார மற்றும் நிதித்திறன்களை நாம் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே ரஷ்ய நிலக்கரி இறக்குமதியை தடை செய்துள்ளது.

ஆனால் போலந்து மற்றும் பால்டிக் நாடுகள் எண்ணெய் தடைக்கு அழைப்பு விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# ல்ல முடியாது
## ிரதமர் மோடி



ள்ளது. அதனால், உலகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பாதிப்பை சந்தித்து வருகிறது. வளர்ந்து வரும் நாடுகளும், ஏழ்மை நாடுகளுமே அதிக பாதிப்பை சந்தித்துள்ளன எனவும் மோடி குறிப்பிட்டார்.

போரால் மனித குலத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து இந்தியா கவலை கொள்கிறது. இந்த விவகாரத்தில் அமைதியையே இந்தியா விரும்புகிறது.

ஜனநாயக நாடுகளில் இந்தியாவும் ஜேர்மனியும் பல்வேறு பொதுவான கொள்கைகளைப் பகிர்ந்து கொண்டு வருகின்றன எனவும் பிரதமர் மோடி தெரிவித்தார். (நி)

வார்த்தை நடத்தவுள்ளதாக, ஜப்பானில் இருந்து வெளியாகும் கியோடோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.


இந்த சந்திப்பில், அணு ஆயுதங்களற்ற உலகிற்கான ஆதரவை போப் பிரான்சிஸிடம் ஜப்பானிய பிரதமர் கிஷிடா கோருவார் என கூறப்படுகிறது. (நி)

# உள்நாட்டு தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட பீரங்கி பரிசோதனை வெற்றியளிப்பு

(டில்லி)

நீண்ட தூர இலக்கை அழிக்கும் மேம்படுத்தப்பட்ட உயர் ரக ஏடிஏஜிஎஸ் பீரங்கி பரிசோதனை வெற்றியளித்துள்ளதாக இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த பீரங்கியில் இருந்து சென்ற குண்டுகள் இலக்கை துல்லியமாக தாக்கி



அழித்ததுடன், சுவீடன் தயாரிப்பான Bofors பீரங்கிகளுக்கு பதிலாக இது பயன்படுத்தப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் உள்நாட்டு தொழில் நுட்பத்தில் மேம்படுத்தப்பட்ட இந்த பீரங்கியை தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## முன்னாள் மனைவியை மீண்டும் திருமணம் செய்ய விரும்பும் பில்கேட்ஸ்

(வோஷிங்டன்)



மெலிண்டாவிடம் இருந்து முழுமையாக விலகி செல்லவில்லை என்றும் நட்போடு தான் இருப்பதாகவும் பில்கேட்ஸ் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மே மாதம் பில்கேட்ஸ்-மெலிண்டா இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள் இருவரும் விவாகரத்து செய்துகொண்டு பிரிந்தனர்.

இந்த நிலையில் பில்கேட்ஸ் அமெரிக்காவில் இருந்து வெளியாகும் ஒரு பத்திரிகைக்கு பேட்டி அளித்துள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது,

27 ஆண்டுகள் திருமண வாழ்க்கைக்கு பிறகு நான் மெலிண்டாவை விட்டு தனியாக பிரிந்தேன். நான் அப்படி வாழ்க்கையில் மாற்றம் செய்து இருக்கக் கூடாது.

நான் செய்ததை [illegible] மீண்டும் திருமணம் [illegible] என அவர் தெரிவித்தார். (நி)

## ரஷ்யாவின் ரோந்துக் கப்பல்களை தாக்கி அழித்தது உக்ரைன்

(கீவ்)

கருங்கடல் பகுதியில் ரஷ்யாவின் ரோந்து கப்பல்கள் இரண்டை தாக்கி அழித்துள்ளதாக உக்ரைன் இராணுவ ஜெனரல் வலேரி ஸலுஸ்னி தெரிவித்துள்ளார்.

ஸ்மினி (பாம்பு) தீவு அருகே ரஷ்யாவின் ராப்டார் பிரிவு படகு இரண்டை, ஆளில்லா விமானம் மூலம் தாக்கியதாக அவர் தெரிவித்தார்.

எனினும், இது குறித்து ரஷ்யா எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை.

இதனிடையே, கிழக்கு டோன்யெட்ஸ்க் பகுதியில் வான் வழித் தாக்குதலில் உக்ரைனின் மிக்-29 ரக போர் விமானத்தை அழித்துள்ளதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய வான்படை இரண்டு ஏவுகணைகளையும் 10 ஆளில்லா விமானங்களையும் தாக்கி அழித்துள்ளதாகவும் இராணுவ செய்தித் தொடர்பு அதிகாரி இகோர் கொனேக்ஸே கோப் மேலும் தெரிவித்தார்.

இது தவிர, உக்ரைனில் உள்ள இராணுவ ஆயுதக் கிடங்குகள், கட்டுப்பாட்டு அறைகள் உள்ளிட்ட 38 இலக்குகளில் தாக்குதல் நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஏக்கர் மேட்டுநிலப் பயிர்கள்

# காட்டு யானைகளால் அழிப்பு

## கண்டாவளையில் சம்பவம்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள கொழுந்துபுலவு பகுதியில் நேற்று அதிகாலை புகுந்த 3 காட்டு யானைகள் அங்கு 5 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்பட்ட பயிர்களை அழித்துள்ளன.**



வாழ்வாதாரத்திற்காக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு இருந்த மூன்று ஏக்கர் பூசணி செய்கையை முற்று முழுதாக அளித்துள்ளன. இதேவேளை ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரவள்ளிகளையும் துவம்சம் செய்துள்ளதுடன், 500 வர்த்தக பழச்செய்கையினையும், 30 இற்கும் மேற்பட்ட இரண்டு வருட கால தென்னைகளையும் அழித்து துவம்சம் செய்துள்ளன.

அத்துடன் மற்றுமொரு வீட்டுத்தோட்டத்திலுள்ள வாழை மரங்களையும் அழித்துள்ளதுடன், நிலக்கடலை பயிரையும் மிதித்து சேதப்படுத்தியுள்ளன.

தமது பகுதிகளில் இதுவரை காலமும் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் இல்லாத நிலையில் அண்மைக் காலமாக தொடர்ச்சியாக அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த மாதமும் அயல் கிராமமான மயில்கனபுரம் பகுதியிலும் தென்னை மரங்களை அழித்ததாகவும் தொடர்ச்சியாக தமது பகுதியில் வந்து பயிர்களை அழித்துள்ளமையால் மக்கள் மத்தியில் காட்டு யானைகளினால் மிக அச்ச நிலை தோன்றியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் எமது பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்ற அதேவேளை, தமது பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானைகள் வருவதன் காரணமாக இப்பகுதியில் மின்சார வேலி அமைத்துத் தர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-100-316)





இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு வருகை தந்து பூஜை வழிபாட்டில் ஈடுபட்டார். அதனைத்தொடர்ந்து இந்திய அரசின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு வரும் திருக்கேதீஸ்வர ஆலய கட்டுமானப் பணிகளை பார்வையிட்டதோடு, திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார். இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் குழுவினர் விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் : ஜோசப்நயன்)



அட்சய திருதியை நாளான நேற்று யாழ். நகைக் கடைகளில் வாடிக்கையாளர்கள் நகைக் கொள்வனவில் ஈடுபட்டனர். (படம் : சிவசாந்தன்)

# கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்க கூட்டமைப்பு

## இன்று போராட்டம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்து கிராம உத்தியோகத்தர்களையும் இன்று புதன்கிழமை சுகயீன விடுமுறையை அறிவித்து போராட்டத்தில் ஈடுபட வருமாறு கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

அந்த வகையில் இன்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஒன்றுகூடி அங்கிருந்து ஜனாதிபதி செயலகத்திற்கு அமைதியான நடைபயணம் மேற்கொண்ட பின்னர் தமது பிரச்சினைகள் அடங்கிய மகஜரை ஜனாதிபதி செயலாளரிடம் கையளிக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (4)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமும்-கண்டி ரோட்டரிக் கழகமும் இணைந்து வறுமைக்கோட்டிற்குட்பட்ட இரண்டு குடும்பங்களுக்கு நல்லின ஆடுகளை அண்மையில் வழங்கி வைத்தனர். யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இவ்வாறு வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டன. (படம் சுபேசன்)


# அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் ஆரம்பமானது. தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இவ்வாலய அலங்கார உற்சவம் நடைபெறவுள்ளது.

அலங்கார உற்சவத்தின் இறுதிநாளான எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை சுவாமி வீதி வலம் வரும் திருக்காட்சி நடைபெறும். எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் சாந்தியும் இடம்பெறும் என ஆலய நிர்வாகசபை தெரிவித்துள்ளது. (4-18)







Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய மக்களின் புனித ரமழான் பண்டிகை நேற்று நாட்டின் பல பகுதிகளிலும் கொண்டாடப்பட்டது. அந்த வகையில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் பள்ளிவாசல்களில் காலை விசேட தொழுகைகள் இடம்பெற்றன. (படங்கள் : ரவிசாந், சிவசாந்தன், கஜிந்தன், சதீஸ், ஜோசப்நயன்)

# பொருளாதார நெருக்கடியால் பட்டினியாக பாடசாலை வரும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு



(கொழும்பு)

**பாடசாலைக்கு சாப்பிடாமல் பட்டினியில் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக இலங்கை தொழில்சார் பாடசாலை அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட போஷாக்கு வேலைத்திட்டமும் தற்போது நின்று போயுள்ளதாக இலங்கை தொழில்சார் பாடசாலை அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுஜீவ விமலரத்ன தெரிவித்தார்.

மாணவர்கள் காலை யில் பாடசாலையில் நடக்கும் கூட்டத்தின் போது மயங்கி விழும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மயங்கி விழும் மாணவர்களிடம் விசாரித்த போது, அவர்கள் காலையில் உணவு சாப்பிடவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

இதற்கு முன்னர் காலையில் உணவு சாப்பிடாமல் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் ஒரு வகுப்பில் சுமார் நான்கு பேர் வரை இருந்தனர். தற்போது இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பெற்றோரால் பிள்ளைகளுக்கு ஒரு வேளை உணவைக் கூட வழங்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது எனவும் விமலரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# அரிசி மோசடியில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை சுற்றிவளைக்கும் நோக்கில் நேற்று முதல் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவ்வாறான மோசடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படும் என அதிகார சபையின் தலைவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஷாந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உள்நாட்டு அரிசி வகைகளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வகையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, ஒரு கிலோ நாட்டரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாகவும் ஒரு கிலோ சம்பா அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 230 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கிலோ கீரிச்சம்பா அரிசியின் நிர்ணய விலை 260 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# செப்டெம்பர் வரை தேவையான நிலக்கரி கையிருப்பில்

## இலங்கை மின்சாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திற்கு தேவையான நிலக்கரி தற்போது நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், 2 மில்லியன் மெற்றிக் தொன் நிலக்கரி நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் அன்ரூ நவமுனி குறிப்பிட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா மற்றும் ரஷ்யாவிலிருந்தே இவை கொண்டுவரப்பட்டுள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை இந்த நிலக்கரி போதுமானதாக இருக்கும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (நி)

# இரும்புக்கரம் கொண்டு போராட்டத்தை அடக்க திட்டம்



(கொழும்பு)

அலரிமாளிகைக்கு முன்பாக அமைதியான முறையில் போராட்டம் நடத்துபவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிய வருகின்றது.

அமைதியான முறையில் போராட்டம் நடத்துபவர்களை அங்கிருந்து வெளியேற்ற பாதுகாப்புப் படையினர் திட்டமிட்டுள்ளதாக நம்பத்தகுந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை முன்னாள் இராணுவ தளபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே மக்கள் இறையாண்மையை நசுக்கும் பொலிஸாரை எதிர்க்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 320 | 340 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 220 | 250 |
| தக்காளி | 400 | 350 | 360 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 140 | 120 | 120 |
| கோவா | 140 | 120 | 120 | 160 |
| கரட் | 160 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 70 | 60 | 100 |
| புடோல் | 200 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 300 | 220 | 100-350 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 480 | 450 | 500 | 500 |
| வெண்டிக்காய் | 180 | 180 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 190 | 150 | 200 |
| பயற்றங்காய் | 220 | 250 | 170 | 140 |
| லீக்ஸ் | 140 | 180 | 180 | 200 |
| பீற்றூட் | 140 | 200 | 180 | 250 |
| கறிமிளகாய் | 250 | 300 | 220 | 300 |
| முருங்கைக்காய் | 700 | 800 | 500 | 1000 |
| போஞ்சி | 420 | — | — | 520 |
| கத்தரிதம்புள்ள | 320 | 250 | — | 360 |
| கீரை - 1 பிடி | 130 | 120 | 100 | 150 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 40-80 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | — | 200 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 70 | 40 | 40 |
| ஈரப்பலா | — | — | — | — |

# பெற்றோலிய பொருட்கள் கொள்வனவு ஒப்பந்தத்தை ஐ.ஓ.சிக்கு வழங்க முடிவு

(கொழும்பு)

இந்திய ஏற்றுமதி-இறக்குமதி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் குறுகிய கால கடன் வசதியின் மூலம் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்களை வாங்குவதற்கான ஒப்பந்தத்தை இந்தியன் ஒயில் கோப்பரேசன் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மின் துறை அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

சிறப்பு நிலை கொள்முதல் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்தியன் ஒயில் கோப்பரேசன் லிமிட்டெட் நிறுவனத்திற்கு தொடர்புடைய ஒப்பந்தத்தை வழங்க முடிவு செய்யப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

# மூன்று வரங்கள்





(நேற்றைய தொடர்ச்சி)

அதோ தெரியும் பனை மரத்தின் மீது உட்கார்ந்திருக்கும் பறவையைக் கூட அடிக்க முடியும் என்றான்.

மணியகாரரோ "போதும் உன் சவடால். உன்னால் அதை அடிக்க முடியாது. நீ மட்டும் அதை அடித்து விட்டால் என் நிலத்தை எல்லாம் கொடுப்பதாக பந்தயம் வைக்கின்றேன்.

நீ அதை அடித்து விட்டால் நானே அப்பறவையை எடு த்து வந்து உன்னிடம் கொடுக்கிறேன். ஆனால் இதெல்லாம் நீ பறவையை அடித்த பிறகுதானே. நீ எங்கே அடிக்கப் போகிறாய்?" என்று கூறி ஏளனமாகச் சிரித்தான்.

மலையன் உண்டிக் கோலைக் கொண்டு அந்த மரத்தின் மீதிருந்த பறவையை அடித்தான். அது கீழே ஒரு பெரிய பள்ளத்தில் விழுந்தது.

பந்தயப்படி மணியங்காரர் அதை எடுத்து வர அப்பள்ளத்தில் குதித்தார். அங்குள்ள முட்செடிகள் அவரது உடலைக் குத்தின. இதேசமயம் மலையன் குழலை எடுத்து ஊத அவர் ஆடலானார்.

அவரது ஆடை முள்ளில் சிக்கி பல இடங்களில் கிழிந்து போயிற்று. உடலில் கீறல்களும் காயங்களும் ஏற்பட்டன. சற்று நேரத்திற்குப் பின் மலையன் குழல் ஊதுவதை நிறுத்தவே மணியகாரர் முக்கி முணகிக் கொண்டு வெளியே வந்தார். அப்போது மலையன் "நீங்கள் என்னை இந்த ஊரிலிருந்து அனுப்பிய போது இதுபோல கிழிந்த ஆடையோடு அனுப்பினீர்கள்.

இப்போது நீங் கள் இப்படியே ஊரை விட்டு ஓடுங்கள்" என்றான். பந்தயப்படி மணியகாரர் தன் நிலங் களையெல்லாம் மலையனிடம் ஒப்படைத்து விட் டு அந்த ஊரை விட்டே போய் விட்டார்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




சபரி காட்டிய வழியில் அவர்கள் கால்கள் சென்றன; ருசியமுகம் எண்ணும் மலையை அடைந்தனர்; குரங்குகளுக்கு அரசனாகிய சுக்கிரீவன் அவர்களைக் கண்டு அஞ்சினான். மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தென்பட்டது.

ப்கைவர் எனக் கருதிக் குகைகளில் ஒளியமுற்பட்டான்; அனுமனை அழைத்துத் தான் கொண்ட அனுமானத்தை உரைத்தான்; வாலியின் ஏவலை ஏற்று வரிவில் ஏந்தி வந்த வாலிபர்களாய் இவர்கள் தென்படுகிறார்கள், துறவுக் கோலத்தில் துயர் விளைவிக்க வந்திருக்கிறார்" என்று கூறி 'நீ சென்று ஆராய்ந்து உண்மை தெரிந்து திரும்பிவா' என்று ஆணையிட்டான். பாற்கடலில் எழுந்த நஞ்சைக் கண்ட அமரர்களைப் போல வானரர் அச்சம் கொண்டனர். அவர்கள் அச்சத்தைப் போக்கி அமைதியாக இருக்குமாறு அனுமன் கூறினான்; அஞ்சனை மகனாகிய அவன், அஞ்சன வண்ணனாகிய இராமனை மறைவில் இருந்து கவனித்தான்.

'மூவர் கடவுளர்; இருவரே வந்துள்ளனர்; அதனால் இவர்கள் கடவுளர் அல்லர், வில்லேந்திய நிலை[illegible] எதையோ தேடு[illegible]ராய் உள்ளனர்; சோகம் இவர்களை அணைந்திருக்கிறது; அன்பின் திருஉருவாய்க் காணப்படுகின்றனர்', என்பதை அறிந்தான். பிரியம் கொள்ளத்தக்க மனிதராய்க் காணப்பட்டனர். அதனால் அஞ்சாமல் அவர்களை அணுகினான் அனுமன். அவர்கள் பார்வைக்கு அவன் விருந்தாயினான்.

"நீ [illegible] [illegible] தது ஏன்? என்ற வினாக்களைத் தொடுத்தனர். "காற்றின் வேந்தனுக்கு அஞ்சனை வயிற்றில் பிறந்தேன்; நாமமும் அனுமன் என்பேன்" என்று விரிவாய்ச் சொன்னான் அனுமன்.

"இம் மலையில் இருந்து வாழும் வேந்தன் சுக்கிரீவன்; அவனுக்கு யான் ஏவல் செய்வேன்; தேவரீர்! நின் வரவு நல்வரவாகுக; நும்மை நோக்கி விரைவில் வந்தேன்; "அனையவன் ஏவலினாலே உம்மை அறிய வந்தேன்" என்று மேலும் தொடர்ந்தான்.

"அனுமன் அறிவும், ஆற்றலும், கல்வியும், ஞானமும் நிரம்பியவன்" என்பதை அவன் சொல்லால் இராமன் தெரிந்துகொண்டான். "தான் கல்லாத கலையும் அறியாத வேதங்களும் இல்லை என்று கூறும்படி இவன் பேசுகின்றான்; யார் கொல் இச் சொல்லின் செல்வன்?" என்று வியந்தான்; "அவன் அந்தண வடிவத்தில் வந்தான் என்றாலும், சொந்த வடிவம் வேறு இருக்க வேண்டும்" என்பதை இராமன் உணர்ந்தான். "நீ கூறும் தலைவன் சுக்கிரீவனைத்தான் தேடி வந்தோம்; அவன் இருக்குமிடம் அறிவி" என்றான் இராமன்.

வாய்ப்பை எதிர் நோக்கி இருந்த அனுமன், அங்கு சுக்கிரீவன் வந்த வரலாற்றை விளக்கினான்; ருசியமுகப் பருவதத்தில் உயிருக்கு அஞ்சி ஓடி வந்து ஒளிந்து கொண்டிருப்பதை உரைத்தான்; இந்திரன் மகனாகிய வாலி, கதிரவன் காவ்முளையாகிய சுக்கிரீவனைத் துரத்திக் கொண்டு வந்ததையும், சுக்கிரீவன் அங்கு வந்து ஒளிந்ததையும் கூறினான்; சுக்கிரீவன் வானரத் துணையோடு தங்கி இருக்கிறான்" என்று விளக்கினான். அவ் வாறே இராமனும் தான் அடைந்த துயரினை அனுமனுக்குச் [illegible] அறி முகப்படுத்திக் கொண்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி பற்றி பேசுவோர் அதிகம்;
அதைச் செய்வோர் மிகக் குறைவு.
~ டெனிகஸான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அண்ணாமலையை துணைக் கொண்டு பிரதமர் மோடியுடன் பேசுங்கள்

நம் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு இந்திய மத்திய அரசு முடிந்தளவு உதவி வருகிறது.

இந்த உதவி எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என்ற கேள்விகளைச் சிலர் முன்வைத்தாலும் இலங்கையைப் பொறுத்தவரை ஆபத்பாந்தவனாக இருப்பது இந்தியா என்பதை எவரும் மறுதலித்துவிட முடியாது.

இந்நிலையில் இந்தியா சொல்வதைத் தட்டிவிடுமளவில் இலங்கை இல்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனிக்க வேண்டும்.

அதாவது இலங்கையின் பொருளாதார நெருக்கடி என்பது தானாக ஏற்பட்டதன்று.

மாறாக, யுத்த செலவுக்காக அவ்வப்போது பட்ட வெளிநாட்டுக் கடன்கள் ஒருசேர அதனை மீளச் செலுத்துவதே பெரும்பாடென்றாயிற்று.

தவிர, நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்பட்ட குளறுபடிகளும் அரச நிர்வாகத்தில் இடம்பெற்ற ஊழல்களும் சேர்ந்து இலங்கையைக் கந்தறுத்துவிட்டது.

ஆக, இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் யாவை என்றொரு ஆய்வு இடம்பெறுமாயின், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல், தமிழ் மக்களை அடக்கி ஆளுவதில் பேரினவாத ஆட்சியாளர்கள் காட்டிய கருசனையே இந்தளவு தூரம் பொருளாதார நெருக்கடியாக மேலெழுந்ததென்ற உண்மை கண்டறியப்படும்.

எனவே யதார்த்தத்தின் அடிப்படையில், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாயின், அதற்கான முதல் வழி இன்ப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அமையும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல், இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாதென்பது வெளிப்படையான உண்மை.

இந்த உண்மையை இந்தியா நன்கு உணர்ந்துள்ளது.

அதன்காரணமாகவே; இலங்கைக்கு விஜயம் செய்து விட்டு நாடு திரும்பி இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம் என வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

இவை ஒருபுறமிருக்க, இலங்கையில் உச்சமடைந்துள்ள பொருளாதார நெருக்கடி சிங்கள மக்களிடம் ஓர் உண்மையை உணர வைத்துள்ளது.

அதாவது ஆட்சியாளர்களும் சிங்களப் பேரினவாத ஊடகங்களும் தமிழ் மக்கள் தொடர்பில் உண்மையைக் கூறவில்லை.

இதன்காரணமாக, தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தால் இழைக்கப்பட்ட கொடுமைகளை தாங்கள் முழுமையாக அறிய முடியாமல் போயிற்று என்பதை நேர்மையான சிங்கள மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

இக் களநிலைமை தமிழ் மக்களுக்கு மிகவும் சாதகமானது.

எனவே தென்பகுதியில் ஏற்பட்டுள்ள களநிலையை தக்கமுறையில் பயன்படுத்த தமிழ்த் தரப்புகள் இந்தியப் பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இப்பேச்சுவார்த்தையை அண்ணாமலையின் துணையுடன் முன்னெடுப்பது பொருத்தமானதாகும்.

# போத்தல் குத்து தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகொலை

## வல்லை மதுபான விருந்தினர் விடுதியில் சம்பவம்

(கரணவாய்)

வடமராட்சி வல்லைப் பகுதியில் உள்ள மதுபான விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற போத்தல் குத்து தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் நாச்சிமார் கோவிலடி, திக்கம், பருத்தித்துறையை சேர்ந்த ஞானசேகரம் குணசோதி (வயது-26) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

நள்ளிரவு நேரம் மதுபான விருந்தினர் விடுதிக்கு நண்பர்களுடன் சென்றவருக்கும் அங்கு நின்றவர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் போத்தல் குத்து தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் கழுத்துப் பகுதியில் ஆழமான காயம் ஏற்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அலெக்ஸ்ராஜா சம்பவம் நடைபெற்ற பகுதியை பார்வையிட்டதுடன் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

(ம-7,33,60,104)

## ரஞ்சன் விடுதலைக்காக குழுவொன்று நியமனம்

(கொழும்பு)

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக போராடுவதற்காக விசேட குழுவொன்றை ஐக்கிய மக்கள் சக்தி நியமித்துள்ளது.

புதிய மகசீன் சிறைச்சாலையில் உள்ள ரஞ்சன் ராமநாயக்கவைச் சந்தித்துப் பேசியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் அது இடம்பெறவில்லை என தெரிவித்த சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர் ஹறின் பெர்னாண்டோவின் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)

## குருநாகலில் வாகன விபத்து சிறுமி உட்பட இருவர் பலி

குருநாகல் - ஹெட்டிபொல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுமி உட்பட இரு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கர வண்டியொன்றும் டிப்பர் ரக வாகனமும் ஒன்றுடனொன்று மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 17 மற்றும் 8 வயதுகளையுடைய இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்தில் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

### வலிப்பு நோயினால்

## துன்னாலை குடவத்தையில் 8 வயது சிறுவன் மரணம்

(கரணவாய்)

வலிப்பு நோயினால் துன்னாலை குடவத்தையில் 8 வயது சிறுவன் ஒருவன் மரணமடைந்துள்ளான்.

துன்னாலையில் வீட்டிற்கு அருகாமையில் விழுந்து கிடந்த சிறுவன் ஒருவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் துன்னாலை குடவத்தைப் பகுதியைச் சேர்ந்த மகிந்தன் மயூரன் (வயது-8) என்பவராவார்.

இவருக்கு ஏற்கனவே வலிப்பு நோய் இருந்த நிலையில் வீட்டில் இருந்து வெளியே சென்ற சிறுவன் அப்பகுதியில் உள்ள ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள வீதியில் வீழ்ந்து கிடந்ததை அடுத்து அவரை மீட்டு வந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

மரண விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## தொண்டமானின் ஆவணங்களும் எம்மிடம் இருக்கின்றன

### அநுரகுமார திஸாநாயக்க பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் அமரர் ஆறுமுகம் தொண்டமான் தொடர்பான தகவல்களும் தம்மிடம் இருக்கின்றன என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

"நாட்டை நாசமாக்கிய திருட்டுக் கும்பலை ஒட்டுமொத்தமாக அம்பலப்படுத்தல்" எனும் தொனிப் பொருளின்கீழ் "ஊழல் எதிர்ப்புக் குரல்" எனும் அமைப்பால் நேற்று விசேட ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பில் முன்னாள், இந்நாள் அமைச்சர்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் ஊழல், மோசடிகள் குறித்த தகவல்களை அநுரகுமார திஸாநாயக்க அம்பலப்படுத்தினார்.

இதன்போதே கால்நடைவள அமைச்சுப் பதவியை அமரர் ஆறுமுகம் தொண்டமான் வகித்தபோது, வாகனங்களுக்கு எரிபொருள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான தகவல்கள் இருக்கின்றன என்று அநுரகுமார குறிப்பிட்டார். (நி)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

மணி ஐந்து ம-வையும் நரேந்திரரையும் தவிர மற்ற பக்தர்கள் வீடு திரும்பினர்.

ம-கோயில் தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு குடிசையின் பக்கமாக ஹம்சகூரை நோக்கி வந்தார். அங்கே அந்தக் குளத்தின் தென்புறப் படிகளின் மேல் குருதேவர் நின்றிருந்தார்.

அப்போது குருதேவர் நரேந்திரரிடம் இதோ பார்! இன்னும் கொஞ்சம் அதிகமாக இங்கு வந்து போ. நீங்கள் எல்லாம் இப்போதுதான் புதிதாக வர ஆரம்பித்திருக்கிறீர்கள். அறிமுகமான பிறகு பொதுவாக மனிதர்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்வார்கள். புது மாப்பிள்ளையைப் போல் (நரேந்திரரும் ம-வும் சிரித்தனர்) என்ன, வருவாய் அல்லவா?

நரேந்திரர் பிரம்ம சமாஜத்தை சேர்ந்தவர். வாக்குக்கொடுப்பதில் சற்றே எச்சரிக்கையாக இருப்பவர்.

எனவே சிரித்துக்கொண்டே "முயற்சி செய்கிறேன்" என்றார். மூவரும் குடிசைப் பக்கமாக நடந்து குருதேவரின் அறையை நோக்கி வந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 57

எனவே இதனை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்தாலும் எதிர்பார்க்கும் பிரதிபலனை மற்றைய இனத்தவர்கள் பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே குழு 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A)(4)(b) யும் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட தேர்தல் தொகுதிகளில் அந்தந்த சமூக விருப்பங்களை அந்தப் பிரதேசங்களில் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது.

**மேலும் பல் உறுப்பினர் தேர்தல் தொகுதியில் பல்வேறு சமூகங்களின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் வாய்ப்பினையும் அப்பரிந்துரைகள் மூலம் அறிய முடியவில்லை.**

அதிகமான பிரேரணைகளின் பரிந்துரைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் செய்ய வேண்டிய முறைபற்றி கூறியிருந்தாலும் அவற்றுள் சில சரியான தகவல்களைத் தரவில்லை. அவற்றுள் பல பரிந்துரைகள் பிரதேச செயலக பிரிவுகளின் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு எல்லை நிர்ணயம் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஒன்று உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும், இன்னும் ஒன்று பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளின் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) பகுதியை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும் என்றும், மற்றும் ஒன்று குறிப்பிட்ட தேர்தல் தொகுதிகளில் குறிப்பிட்ட 3 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தன.

இவற்றுள் சில பல் அங்கத்துவ தேர்தல் தொகுதியையும் பரிந்துரைத்திருந்தன. பெரும்பாலான பரிந்துரைக்கப்பட்ட பிரேரணைகளில் தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், மேலும் பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் இப்பிரேரணைகளை குழுவால் கருத்தில் எடுக்க முடியவில்லை. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களைத் தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும்போது சேர்த்துக் கொண்டுள்ளது.

மூன்று பிரேரணைகள் விரிவான ஆலோசனைகளை பரிந்துரைத்தன. அவை விபரித்ததாவது ஒன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை எந்தவித மாற்றமும் செய்யாமல் அப்படியே வைத்திருப்பதற்கும் மற்றையது கல்பிட்டிய பிரதேசத்தை பல் அங்கத்தவ தேர்தல் தொகுதிக்கு மாற்றுவதற்கு எதிராகவும் மற்றும் ஒன்று ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் 2 பிரதேச செயலக பிரிவுகளை இணைப்பதற்குமாக இருந்தன. இந்தப் பரிந்துரைப்புகள் தேவையான வேளைகளில் கருத்தில் கொள்ளப்பட்டன.


மூன்று சமர்ப்பிப்புகளுக்கு குழுவால் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையேற்படவில்லை. ஏனென்றால் அதில் ஒன்று எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக்கவில்லை. மற்றையவற்றின் பரிந்துரைகள் குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாக அமையவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும்போது, தொகுதிகளின் பெயர்கள், அத்தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை, கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது. தீர்மானிக்கப்பட்ட பெயர்கள் தேர்தல் தொகுதிகள் பெயரிட்டு பெறப்பட்ட பல பிரேரணைகளுடன் ஒத்துப் போகிறது.

சுருக்கமாகக் கூறினால் 11 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 5 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டு, 8 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

அத்தொகுதிகள் கல்பிட்டி (37), புத்தளம் (39), ஆணமடுவ (104), முந்தல் (58), சிலாபம் (70), மாதம்பே (94), நாத்தாண்டி (71), வென்னப்புவ (75) என்பனவாகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (P4) இல் தரப்பட்டுள்ளது.

**சுருக்கமாகக் கூறினால் 11 பிரதேச செயலகப் பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 5 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டு, 8 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.**




தேசமாகவும், 731 சதுர கிலோமீற்றர் உள்ளக நீர்ப்பரப்பாகவும் காணப்படுகின்றது. மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 7 வீதத்திற்கு கிட்டிய பகுதி உள்ளக நீர்ப்பரப்பாகும். மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 3,932 சதுர கிலோமீற்றர் அதாவது 37.5% வரையர்ன பகுதி 2010 ஆம் வருடமளவில் வனப்பகுதியாகக் காணப்பட்டது.

வட்க்கே வட மாகாணத்தையும், தெற்கே மத்திய, கிழக்கு ஆகிய மாகாணங்களையும் கிழக்கே, கிழக்கு மாகாணத்தையும், மேற்கே, வடமேல், வடக்கு ஆகிய மாகாணங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இம் மாகாணத்தின் தலைநகரம் அநுராதபுரமாகும். 2016 ஆம் ஆண்டில் மாகாணத்தின் வீதிகளின் நீளம் 3141 கிலோமீற்றர்களாகக் காணப்பட்டது.

அட்டவணை (P4)- புத்தளம் மாவட்ட தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும்

| தேர்தல்தொகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கல்பிட்டி | 27478 | 11650 | 58861 | 1435 | 99424 |
| முந்தல் | 60170 | 13396 | 15060 | 199 | 88825 |
| புத்தளம் | 31777 | 8863 | 58455 | 808 | 99903 |
| ஆணமடுவ | 92842 | 681 | 677 | 33 | 94233 |
| சிலாபம் | 80185 | 7734 | 4921 | 275 | 93115 |
| மாதம்பே | 88970 | 2248 | 2752 | 271 | 94241 |
| வென்னப்புவ | 92528 | 3343 | 117 | 370 | 96358 |
| நாத்தாண்டி | 86888 | 2379 | 6703 | 327 | 96297 |
| புத்தளம் மாவட்டம் | 560838 | 50294 | 147546 | 3718 | 762396 |

## வட மத்திய மாகாணம் பற்றிய தகவல்கள்

இலங்கையிலுள்ள மாகாணங்களுள் பரப்பளவில் வடமத்திய மாகாணம் பெரியதாகும். அநுராதபுர மாவட்டத்தின் 7,179 சதுர கிலோமீற்றரையும், பொலநறுவை மாவட்டத்தின் 3,293 சதுர கிலோ மீற்றரையும் கொண்ட வடமத்திய மாகாணத்திற்குரிய மொத்த நிலப்பரப்பு 10,472 சதுர கிலோ மீற்றர் ஆகும்.

இந்த மாகாணத்தின் நிலப்பரப்பு முழு நாட்டின் நிலப்பரப்பில் 16 சதவீதமாகும். மாகாணத்தின் நிலப்பரப்பில் 9,741 சதுர கிலோமீற்றர் தரைப்பிர

**இலங்கையிலுள்ள மாகாணங்களுள் பரப்பளவில் வடமத்திய மாகாணம் பெரியதாகும். அநுராதபுர மாவட்டத்தின் 7,179 சதுர கிலோமீற்றரையும், பொலநறுவை மாவட்டத்தின் 3,293 சதுர கிலோ மீற்றரையும் கொண்ட வடமத்திய மாகாணத்திற்குரிய மொத்த நிலப்பரப்பு 10,472 சதுர கிலோ மீற்றர் ஆகும்.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமத்தில்...

வாய்க்கிழமை மாலை சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளது.

இதில் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 11 மாதம் நிரம்பிய சாந்தகுமார் விஸ்வந்த் என்ற ஆண் குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளது. (ம-7,30)

## கிணற்றிலிருந்து...

இதில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 37 வயதுடைய கே.பிரதீப் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடற்றொழில் நடவடிக்கைக்காக முல்லைத்தீவு வந்த ஒருவரே சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-7,281)

## சாவகச்சேரியில்...

உத்தியோகத்தர் பலியாகியுள்ளார்.

இதில் ஏழாலையில் கடமையாற்றும் கச்சாய் வீதி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 30 வயதான நிசாந்தன் என்ற இளம் உத்தியோகத்தரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-7,30,33,104)

## பிக்கு மாணவர்...

சம்மேளனம் நேற்று கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தது.

விகாரமஹாதேவி பூங்காவிற்கு அருகாமையில் இந்த போராட்டம் ஆரம்பமாகி இருந்தது.

உலக வர்த்தக மையத்திற்கு அருகே அமைந்துள்ள பொலிஸ் வீதித் தடையை அகற்றி முன்னோக்கி நகர்ந்த பேரணி மத்திய வங்கிக்கு அருகாமையில் இருந்த வீதித் தடையையும் அகற்றி ஜனாதிபதி மாளிகையை நெருங்கியது.

இதன்படி, ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் சிறிது நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக பிக்குகள் சம்மேளனம், பின்னர் காலிமுகத்திடல் போராட்ட பூமிக்கு பேரணியாகச் சென்றது.

தற்போதைய நெருக்கடியான நிலையில் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் இவ்வாறானதொரு குழுவினர் போராட்டம் நடத்துவது இதுவே முதன்முறையாகும். (ம-7)

## பலாலி விமான...

அரசாங்கம் தமிழர்களுக்கு உச்ச அதிகாரம் பெறுவதற்கு துணை நிற்கும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஊழல் மோசடி...

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் இடம்பெற்ற நிதி முறைகேடு, இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற நிதி முறைகேடு, தேசிய லொத்தர் சபையில் 18 மில்லியன் நிதி முறைகேடு.

விமானப் படைக்கு மிக் ரக வானூர்தி கொள்வனவின்போது இடம்பெற்ற முறைகேடு, எஜின் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற முறைகேடு, கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தத்தின்போது இடம்பெற்ற முறைகேடு, உப ஒப்பந்தம் வழங்கலின்போது விளையாட்டுத்துறை அமைச்சில் இடம்பெற்ற முறைகேடு, கொழும்பு கோட்டை ட்ரான்ஸ் வேர்க் சதுக்கத்தில் 4 ஹெக்டர் காணி குத்தகைக்கு வழங்கியபோது இடம்பெற்ற நிதி முறைகேடு, பியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுத்திடல் நிர்மாணத்தின்போது இடம்பெற்ற முறைகேடு, பேலியகொடை மீன் சந்தை அமைந்துள்ள வர்த்தக நிலையங்களை வாடகைக்கு வழங்கியபோது இடம்பெற்ற முறைகேடு, தேசிய லொத்தர் சபைக்காக 150 கூடாரங்களை அமைத்தபோது இடம்பெற்ற முறைகேடு, அவன்காட் நிதி மோசடி உள்ளிட்ட 40 பிரதான நிதி முறைகேடுகள் தொடர்பான ஆவணங்கள் உள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் சொத்துக்களில் பெரும்பானவை வர்த்தகர் திருக்குமார் நடேசன் பெயரில் உள்ளது.

குறித்த நிதி முறைகேடுகள் சிலவற்றுடன் முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணதுங்க, பசில் ராஜபக்ஷ, கெஹலிய ரம்புக்வெல ஆகியோர் தொடர்புபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோருக்கு எதிரான கோப்புகளும் உள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்துள்ள ஊழல் எதிர்ப்புக் குரல் அமைப்பின் இணைப்பாளர் வசந்த சமரசிங்க, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடுமாறு, தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் 4 தடவைகள் கடிதங்கள் மூலம் கோரியிருந்ததாக குறிப்பிட்டுள்ளார். 106 பக்கங்களை மறைத்து வைத்துள்ளனர்.

அந்தப் பக்கங்களில் 3,250 மில்லியன் பணத்தை பகிர்ந்து கொண்டவர்கள் தொடர்பான விபரங்கள் அதில் உள்ளடங்கியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த 52 பேரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த 25 பேரும் பணம் பெற்றுக்கொண்ட விபரம் உள்ளடங்கியுள்ளது.

அந்தப் பெயர் விபரங்களில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரின் பெயரும் உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வீட்டிலுள்ள அனைவரும் அலோஸியஸிடம் பணம் பெற்றுள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன, அவரது மகள், அவரது மருமகன், அவரது மகன் என அனைவருக்கும் பணம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தாங்கள் முறைப்பாடு செய்துள்ளதாக ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் இணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

# வேலைநிறுத்தத்துக்கு ஒத்துழைப்பு இல்லை

## தொழிற்சங்கப் பிரதிநிதிகள்

(கொழும்பு)

குறுகிய அரசியல் நலன்களுக்காக மக்களை அசௌகரியத்திற்கு உட்படுத்தும் நோக்கத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி முன்னெடுக்க உத்தேசித்துள்ள வேலைநிறுத்தத்திற்கு எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப் போவதில்லையென, பல அத்தியாவசிய சேவை வழங்குனர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தமது சேவையை தொடர்ந்து வழங்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

உத்தேச வேலைநிறுத்தமானது, தொழிலாளர்களின் உரிமைகளுக்காக அல்லவென்றும், பல அரசியல் கட்சிகளின் நலனுக்காகவே மேற்கொள் ளப்படவுள்ளதெனவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். (ம-7)

## மகிந்த பாராளு...

உள்ளார்.

பெரும்பான்மையை நிரூபிப்பவர்களுக்கு பிரதமர் பதவியை வழங்க தயாராக இருப்பதாக அவர் அறிவிப்பாரென ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

புதிய பிரதமர் நியமனம் செய்யப்படும் வரை தானே பிரதமராக இருப்பாரென அவர் அறிவிப்பாரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு மேலும் பாதாளத்துக்கு செல்வதனை தடுப்பதற்காக, புதிய பிரதமர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தான் பதவி விலகப் போவதில்லையென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இன்று பாராளுமன்றத்தில் கூற வாய்ப்புள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)


மெகா பவர்
திகதி 03/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1099
U 03 19 39 70 77

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.05.03
சீட்டிழுப்பு இலக்கம் 060
கடகம் 24 34 45 51 கடகம்

மஹஜன சம்பத
திகதி 2022/05/03
சீட்டிழுப்பு இலக்கம் 4751
S 6 0 1 8 2 8

தன நிதானய
திகதி -2022.05.03
சீட்டிழுப்பு இலக்கம் - 781
Q 26 44 61 72

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1728 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022/05/03 தினம் செவ்வாய்
J 11 32 41 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 59,610,696/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.05.03
சீட்டிழுப்பு இல: 3889
ரூ.3,304,080/-
வெற்றி இலக்கங்கள் 12 39 40 67 Q

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 166
சீட்டிழுப்பு திகதி 03.05.2022
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 22 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,942,060/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,244,696/-
திகதி 2022/05/03
வெற்றி வாரம் 3440
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 03 06 49 52 மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,488,660/-

12 ada
U 04 14 43 45 56
சீட்டிழுப்பு வாரம் 904
2022.05.03 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 234,863,209/-
தொலை பேசி : 011-2 333 546-47

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1554
சீட்டிழுப்பு திகதி: 2022.05.03
ரூ. 4,590,500/-
வெற்றி இலக்கங்கள் 12 15 49 66 L


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

எமது GM நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்படவுள்ளன. நாட்டின் அசாதாரண சூழ்நிலையை கருத்திற்கொண்டு மிகக் குறைவான தகைமை அடிப்படையில் இளைஞர், யுவதிகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். முன்அனுபவம் ஏதுமின்றி பயிற்சியுடன்கூடிய தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும். நேர்முகக் தேர்வின் போது தெரிவு செய்யப்படுவர்களுக்கு பயிற்சியின்போது நிறுவனத்தினால் கொடுப்பனவுகள் வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் தகுதிக்கேற்ற ஊதியம் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். (11264)

**077 297 1027, 076 116 5481**

## உடனடி வேலை வாய்ப்பு...

நாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையை கருத்திற் கொண்டு எமது HR நிறுவனமானது புதிய கிளைகளிற்காக வேலை வாய்ப்பினை வழங்கவுள்ளது. ஒவ்வொருவரது தகைமைகள், திறமைகளுக்கேற்ப பதவிகள் தீர்மானிக்கப்படும்.

பயிற்சியின்போது 22,500/= தொடக்கம் 28,500/= வரையும் பயிற்சியின் பின்னர் 34,500/= - 60,000/= வரையிலும் பெற்றுக்கொள்ள முடியும். நேர்முகத் தேர்வில் நபர்கள் தெரிவு செய்யப்படுவர். (11235)

**077 174 3524, 077 062 1631**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளான் ஒட்டகப்புலத்தில் **30** பரப்புக் காணி 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- அச்சுவேலி - தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பிரதான (காபற்) வீதியில் இருந்து 50m தூரத்தில்.
- ஒட்டகப்புலம் றோ.க.த.கலவன் பாடசாலைக்கு அருகாமையில்.
- 14 அடிப்பாதையுடன்.
- அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து 2km தூரம்.

**ஒரு பரப்பின் விலை: ஐந்து இலட்சம்** (11246)

**☎-077 911 6983**

# இத்தாலி செல்ல முயற்சி கட்டுநாயக்கவில் ஐவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இத்தாலி செல்ல முயன்ற ஐந்து இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறும் பகுதியில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி விசாக்களைப் பயன்படுத்தி இத்தாலி செல்ல முயற்சி செய்த நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாரவில பகுதியைச் சேர்ந்த குறித்த ஐவரினதும் விசாக்கள் தொடர்பாக எழுந்த சந்தேகம் காரணமாக முன்னெடுக்கப்பட்ட சோதனையில் அவை போலியாக தயாரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் தாம் இத்தாலிக்கு செல்ல திட்டமிட்டதாக கைதான ஐவரும் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். (ம-7)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1980 இல் பிறந்த சதயம் 1 ஆம் பாதம், Accounts Assistant சகல வசதிகளும் உடைய மணமகனுக்கு மணமகள் தேடுகின்றோம். (11263)

**077 367 1062**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11167)

**076 825 7716 (ஆகாஸ்)**

## காணி விற்பனைக்கு

பெரியகமம் எழுத்தூர் மன்னாரில் றோட்டுக்கு அருகில் காய்க்கும் தென்னை மரங்களுடன் மூன்று பக்க மதில் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. (11253)

தொடர்புகளுக்கு

**077 864 7589**

## பெண் பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் உள்ள பிரபல புத்தகசாலை ஒன்றிற்கு பெண் பணியாளர்கள் தேவை. A/L வணிகம் படித்தவர்கள் வரவேற்கப்படுவர். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (C-4279)

**077 205 2038**

**இயங்காத நிலையில் உள்ள அனைத்துவிதமான தொலைபேசிகளும் கொள்முதல் செய்யப்படும்.**

**A.R.K MOBILE SHOP**
No.62, Hospital Road, Jaffna. (C-4278)
**T.P : 071 423 3121**

## VISA SERVICES

கனடா, UK, Germany, France போன்ற நாடுகளுக்கான விசாவினை பெற்றுக் கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

9 வருட கால தமிழ் மக்களின் நம்பிக்கை. (11208)

**WINSTAR CONSULTANTS (PVT) LTD**
NO.45, Vembadi Street, Jaffna.
T.P : 077 395 0857

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4270)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா



Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம். / V2 TRAVELS

**0777-068-777**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17.06.1961 | மறைவு 15.04.2021

அமரர்

## கதிரவேலு ரதி

ஆண்டு ஒன்றென்ன
ஆயிரம் ஆண்டுகளானாலும்
மறவோம் நாம் உம்மை!
ஆண்டவன் அடியில் உம்
ஆத்மா இன்புற்றிருக்க
இறைஞ்சுகின்றோம் நாம்.

ஓம் சாந்தி!

பெருங்குளம் வீதி,
மடத்தடி, சாவகச்சேரி. (11200)

இராசமோகன் குடும்பத்தினர்

# Diploma in English

for

## School leavers, Government Servants, Preschool and Primary Teachers

பாடசாலை முடித்தவர்கள், அரச ஊழியர்கள், முன்பள்ளி மற்றும் ஆரம்ப ஆசிரியர்களுக்கான ஆங்கிலத்தில் டிப்ளோமா

- **Six months (180 hours)**
- **Panel of Experienced Lecturers**
- **Online listening & speaking practice**

ஆரம்பம் 06th & 7th May 2022 9.00 am

Classes will be on weekends via online and face to face session separately according to the convenience of participants

பங்கேற்பாளர்களின் வசதிக்கேற்ப வார இறுதி மற்றும் வார நாட்களில் நிகழ்நிலை ஊடாகவும் மற்றும் நேரடியாகவும் தனித்தனி பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறும்.

**for further details & registration - 077 788 0330**

**Sri second Language Education Centre, 164, Ramanathan Road, Front of science faculty of University of Jaffna, Thirunelveli**

**DR.S.MGUNTTHAN,**
(BA,PGDE,PGDEM,M.Ed, M.Phil.in.Education, Ph.D.)
Lecturer of English, Sri Lanka Teacher Educators' Service, Institution of Professional Development for Teachers. (11266)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.